தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௫௰	திருவள்ளுவர் யாண்டு ௨௲௭ நள, ஐப்பசி (1976 — அக்டோபர் — நவம்பர்)	மலர் ௭

சித்தர் - சித்தர் நூல்கள் ஒரு கண்ணோட்டம்

பேராசிரியர் ச பாலசுந்தரம்,

(துணை முதல்வர் கரந்தைப் புலவர் கல்லூரி)

சித்தர் யார்:—

பரதகண்டமென இற்றைக்கு வழங்கும் இந்நாவலந் தீவில் வரலாற்றுக் காலத்திற்கும் முன்பே தோன்றி உலகெங்கும் பரவி இப்பொழுது இந்தியாவில், இதனுள்ளும் தென்னாட்டில் - தமிழகத்தில் சிறப்பாக நிலைபெற்றிருக்கும் சித்தர் நெறியைக் கண்ட சித்தர்கள் யார் என்பதை முதற்கண் தெளிவுபடுத்திக் கொள்ளல் நலம்.

சித்த மருத்துவம் இத் தமிழகத்தில் மட்டுந்தான் மேற்கொள்ளப்பட்டு வருகிறது ஆராயப்படுகிறது இதனால் சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவம் என்றே பலர் கருதுதலின் சித்தர்கள் தமிழகத்தே தான் பெரும்பாலும் நிலவி வந்தனர் என்று கருதலாம். சித்தர் நெறி தமிழகத்துக் கடவுட் கொள்கை சமுதாயக் கொள்கைகளோடு மிக நெருங்கிய தொடர்புடையதாகவே காணப்படுகின்றது

சித்தர் நெறியையும் சித்தர்களையும் பற்றி இதுபோது அறிவதற்குக் கருவியாக உள்ளவை சித்தர்கள் கூறியதாகக் கொள்ளப்பெறும் மருத்துவ நூல்கள் கோள் இயக்க நூல்கள் (சோதிட நூல்) அறம் பொருளின்பம் வீடு ஆகிய நாற்பொருள்களின் நுண்மை உண்மைகளைக் குறிப்பாகவும் வெளிப்படை

யாகவும் உணர்த்துவனவாகத் திகழும் சித்தர் பாடல்கள் ஆகிய வையே இவைபற்றி அவ்வப்பொழுது தொடர்புடையோர் களால் கூறப்பெற்ற கருத்துக்கள் ஆகிய இவையேயாம். இனிச் சித்தர் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகக் காண்போம்.

தென்னகத்திற் சிறப்பாகத் திகழும் சைவ சமய முதற் கடவுளாகிய சிவபெருமானே சித்தன் அவன் தொடர்புடையவர் கள் அவனடியார்கள் ஆகிய இவர்களே சித்தர்கள் என்று வலியுறுத்துவராய்

"சித்தனே திரு ஆலவாய் மேவிய அத்தனே" என்றும்
"சித்தனைத் திருவண்ணா மலையானை" என்றும்
"சித்தாசிதத்தித் திறங்காட்டும சிவனே என்றும்
சித்தனைச் சிவலோகனை" என்றும்
"சித்தர்வந்துபணியும் செல்வச்சிரபுரமேயவனே"
"சித்திசெய்பவர்கட்கெல்லாம் சேர்விடம்"
"சித்தராய் வந்துதன்னைத் திருவடி வணங்குவார்" என்றும்

சமய குரவர்கள் திருவாய் மலர்ந்தருளினர் இவ்வடிப்படையிலே சித்திபெற்றவர், சித்தையுடையவர் சித்தராவார் என்பார் திரு. வி. க அவர்கள் மேலும் இவர் சித்தாந்தம் என்பது சித் தர்கள் கண்ட முடிபு எனப் பொருள் கூறித்தூய சிவநெறிக் கொள்கையுடையவர் என்பார். இனி அணிமா மகிமா கரிமா, லகிமா, பிராப்தி பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என் னும் எட்டு பெரிய சித்திகள் கைவரப்பெற்று மணிமந்திர மருந்துகளால் அழியா உடம்பைப் பெற்று அற்புதங்கள் பல நிகழ்த்தவல்லவர் சித்தர்கள் எனப் புராண மதக் கோட்பாடு டையவர்களும் இற்றைக்குள்ள சித்த மருத்துவ வல்லுநர்களும் கூறுவர். சைவசமய குரவர்களேயன்றிச் சிவநெறி பற்றி ஒழுகிய தாயுமானவர் அவர்களும் "வித்தகச் சித்தர் கணம்," என்றும் "சித்தாந்த முத்தி முதலே சிரகிரி விளங்கவரும் தட்சணா மூர்த்தியே" என்றும் பலவாறாகக் கூறிய சித்தர்கள் சிவநெறி யாளர்களே என வலியுறுத்துவார். திருவருட் பிரகாச வள்ள லார் என்னும் வடலூர் இராமலிங்க சுவாமிகளின் கருத்தும் இதுவே எனப் புலப்படுகிறது.

இனி சித்தர் நூல்களில் அவர்களின் வாய்மொழியாகிய அகச் சான்றுகளைக்கொண்டு ஆராயின் சித்தர்கள் எண்வகைச் சித்திகளையும் மருந்து, ரசமணி, ககனகுளிகை, மந்திரம்

காயகல்பம், இரசவாதம் ஆயவற்றையும் விளக்குவதோடு சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நால்வகைகளையும்பற்றி விளக்கிப் பக்தி நெறியையும் இடையிடையே போற்றிக் கூறுகின்றனர் திருமூலர் தமது திருமந்திர நூலில் சமயத் தொடர்பான எல்லாப் பகுதிகளையும் விளக்குகின்றார்; அறம்பொருள் பற்றியும் பேசுகின்றார்.

சிவவாக்கியர் போன்றோர் இடையிடையே உருவ வணக்கத்தையும் – பூசனை முதலிய சடங்குகளையும் சில சமுதாயக் கோட்பாடுகளையும்-சாதி முறைகளையும் நடிப்புக்குருமார்களையும் பொய் வேடதாரிகளையும் குறை கூறி இடித்தும் நகையாடியும் பேசுகிறார். சித்தர்களில் பலர் சமயச் சடங்குகளாகப் பாமரமக்கள் ஏற்றொழுகிவரும் பலவற்றை எள்ளியுரைக்கின்றனர் ஆதலால் பகுத்தறிவு அடிப்படையில் நாத்திகக் கோட்பாடும் விஞ்ஞானக் கண்ணோட்டமும் உடையவர்கள் சித்தர்கள் எனச் சாமி சிதம்பரனார் விளக்க முயல்கிறார். மேலும் இவர் சித்-அர் எனப் பிரித்து சித் என்பது அறிவைக் குறிக்கும் வடசொல் எனக் கொண்டு அறிவுடையவர்கள் ஞானிகள் எனப் பொருள் கூறுகின்றார்.

யோக முறையால் சமாதி நிலை கை வரப்பெற்றுச் சாகாக் கலையை உணர்ந்து காயசித்தி பெற்று சிவநீர்தெரிந்து அறிந்து எண்வகைச் சித்திகளும் ஆற்றவல்ல மெய்ஞ்ஞானிகள் என்றும் உலகம் உய்யும் பொருட்டு மருத்துவம் முதலிய கலைகளைத் திருவாய் மலர்ந்தருளிய அருளாளர்கள் என்றும் சித்தர்களைப் பற்றி விளக்குகிறார் திருவாளர் பலராமையா அவர்கள்.

ஏறத்தாழ இக்கருத்துக்களின் பிழிவாகவே சித்தர்களைப் பற்றித் திரு. தெ. பொ. மீ. அவர்களும் கலைக் களஞ்சியத்தில் கூறியுள்ளார். பொதுவாகத் தமிழகச் சான்றோர்களின் கருத்தும் இதுவேயாம்

என் கருத்து

சித்தர் என்பது சித்தம் என்னும் சொல்லடியாகப் பிறந்த பெயர் (சித்-அம்) சித்தம் என்பது அகக்கரணம் நான்களுள் ஒன்று. அகக்கரணம் நான்கும் செயல்படுவதை

" அந்தக்கரணம் அடைவே உரைக்கக் கேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் – சிந்தையிவை

பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்தாங்
குற்றதுசிந் திக்கும் உணர்" என்னும்

உண்மை விளக்க நூல் வெண்பாவால் அறியலாம். அஃதாவது புலன்கள் வாயிலாக மனம் ஒன்றினைப் பற்றும் அதனைப் புத்தி நிச்சயிக்கும், அதை நோக்கி அகங்காரம் எழுந்திருக்கும் அதன் பின் அங்குற்றதைச் சித்தம் சிந்தித்துணரும் அகங்காரம் தெரியாத நிலை—சித்தம் தெளிவுறும் நிலை — 'சித்' என்பதற்கு மற்றொரு பொருள் ஆன்மா அஃதாவது உயிர். எனவே சித்தும் சித்தமும் ஒராற்றான் தொடர்புடையவை எனலாம்

ஆக சித்தர் என்பவர் யாது ஒரு பொருளாயினும் அப் பொருளைப்பற்றி ஆன்ம உணர்வோடு ஆராய்ந்து இஃது இத்தகையது என உறுதி செய்து கொள்பவர் என்பது தெளிவாகிறது இச்சொல்லின் நேரான பொருளும் இதுவே, இதனை

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" என

மெய்யுணர்தலதிகாரத்துவைத்துக் கூறினர் திருவள்ளுவர். அறிவு (புலனறிவு) வேறு மெய்யறிவு (தத்துவ ஞானம்) வேறு என்பதை நன்குணர்தல் நலம்.

எனவே உலகியல் நெறியாயினும் ஞான நெறியாயினும், பக்தி நெறியாயினும் ஏனைய நூல் நெறிகளாயினும், அவற்றை அணுகி மேற்கொள்ளவோ விளக்கவோபுகின் நடுவுநிலையோடு ஐயந்திரிபற நன்கு ஆராய்ந்து கோது குறைகளைச் சுட்டி நீக்கி மெய்ம்மை இதுவே என உறுதி செய்தொழுகுபவர் சித்தர் எனலாம். அணிமா முதலிய சித்திகளும் காயசித்தி முதலாயவைகளும் அவ்வழி ஒழுகுவதனால் பெறும் ஆற்றல்களே யாம் எனவே சித்தர் என்றால் மெய்ப்பொருள் கண்டவர் என்று கொள்வதே சிறப்பாகத் தோன்றுகிறது, இதனைக் கீழ்வரும் சில சித்தர் பாடற் பகுதிகளால் நன்கு தெளியலாம்.

"சிறந்தமனத் தெளிவாகிச் சேர்ந்தோன் சித்தன்
சிவசிவா அவனவன் என்றுரைக்கலாமே"
(வால்மீகர் - 3)

"உள்ளங்கையிற் கனிபோல உள்ள பொருளை
உண்மையுடன் காட்டவல்ல உண்மைகுரு"
பாம்பாட்டிச் சித்தர் 13

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே —(திருமந்திரம்)

சித்தர்கள் வரலாறு :

சித்தர்கள் ஒன்பதின்மர் என்றும் பதினெண்மர் என்றும் கூறுவர். தாயுமானவர் நவநாத சித்தர்கள் என்று குறிப்பிடு கின்றார். இத்தொகையுள் காணப்பெறும் பெயர்கள் எல்லா நூல்களிலும் ஒன்றாக அமையவில்லை பெரிய ஞானக் கோவை. பதினெண் சித்தர் சில்லரைக் கோவை என இக்காலத்து அச்சில் வெளிவந்த புத்தகங்களில் வடலூர் இராமலிங்க சுவாமி கள் பெயரும் அவர் பாக்களிற் சிலவும் சேர்க்கப்பெற்றுள்ளன

சித்தர் ஒன்பதின்மர் என அபிதான சிந்தாமணியில் காணப் பெறுவர்: சத்திய நாதர், சதோகநாதர், ஆதிநாதர். அநாதி நாதர். வெகுளிநாதர், மதங்கநாதர். மச்சேந்திர நாதர், கடேந் திர நாதர், கோரக்கநாதர் இவர் தம் பெயர் ஈற்றில் நாதர் என்றே முடிவதால் நவநாத சித்தர்கள் எனத் தாயுமான சுவாமிகள் குறிப்பிடுவது இவர்களையே போலும் இவர்கள் ஒவ்வொருவருக் கும் ஒவ்வொரு கோடி மாணவர்கள் உள என்பது மரபு எனினும் இப்பெயர்கள் யாவும் வடமொழியாகவே காணப்படுகின்றன.

பதினெண்மராவார் :

அகத்தியர், போகர். கோரக்கர். கைலாசநாதர், சட்டைமுனி திருமூலர், நந்தி கூன்கண்ணர், கொங்கணர், மச்சமுனி வாச முனி, கூர்மமுனி, கமலமுனி இடைக்காடர் புண்ணாக்கீசர், சுந்த ரானந்தர், உரோமரிசி பிரமமுனி, என்ப. இவருள் சிலரை நீக்கித் தன்வந்திரி புலஸ்தியர், புசுண்டர், கருவூரார், இராம தேவர், தேரையர் கபிலர் ஆய இவர்களைக் கூட்டிப் பதினெண் மர் என்பர் சிலர் இவர்களேயன்றிச் சித்த மருத்துவ நூல் களிலும், சித்தர் பாடல்களிலும் காணப்பெறும் பெயர்கள் வரு மாறு:— வான்மீகி, பதஞ்சலி இடைக்காடர், பாம்பாட்டிச் சித் தர் கடுவெளிச் சித்தர், அழுகண்ணிச்சித்தர், சங்கரர், கோதமர், வைரவர் மார்க்கண்டர் காலாங்கி, போகர், புலிப்பாணி அகப் பேய்ச்சித்தர், குதம்பைச் சித்தர், சிவவாக்கியர் என்பனவும் திருவள்ளுவர் — ஔவையார். பட்டினத்தார், பத்திரகிரியார் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன

இவர்களேயன்றி மிகப் பிற்காலத்தவர்கள் எனக் கருதத் தக்க பீருமுகமது, மதுரைவாலேசாமி, சேஷயோகி, கணபதி தாசர், சூரியானந்தர் பூரணனந்தர் அருணசலகுரு. தருமபுர ஆதீன முதல்வர் குருஞான சம்பந்தர் பெயர்களும் இராமலிங்க சுவாமிகள் பெயரும் அவர் தம் பாடல்களும் சித்தர் பாடல்கள் என்னும் புத்தகத்திற் காணப்படுகின்றன.

சித்த மருத்துவ நூல்களில் சித்தர்கள் வணக்கமாகக் காணப்பெறும் பாடல் ஒன்று

நந்தியகத்தியர் மூலர் புண்ணக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும் பூனைக்கண்ணர்
கந்திடைக் காடரும் போகர் புலிக்கையீசர்
கரூரார் கொங்கணவர் காலாங்கி யன்திற
சிகந்திலமு கண்ணர் அகப்பையர் பாம்பாம்பாட்டி
தேரையரும் குதம்பையரும் சட்டைநாதர்
செந்தமிழ்ச்சீர் சித்தர்பதி னெண் பேர்பாதம்
சிந்தையுள்ளிச் சிரத் தணியாய்ச் சேர்த்திவாழ்க

எனக் காணப்படுகின்றது. இப்பாடலின் செய்யுள் நடையை நோக்கமிகப் பிற்காலத்துப் போதிய இலக்கண இலக்கியப் பயிற்சி இல்லாத ஒருவர் இப்பாடலே எழுதியாதாகக் கருத வேண்டியுளது. எனினும் இப்பெயர்களை எல்லாம் ஒருங்கு நோக்கும்பொழுது இவர்கள் இமய முதல் குமரி வரையுள்ள பரதகண்டத்தில் வாழ்ந்தவர்கள் எனப் புலப்படுவதோடு ஒரு சிலர் ஐரோப்பிய நாடுகளிலும் சீனவிலும் தொடர்புடையவர் களாக இருந்திருக்கலாம் என்பது தெளிவாகிறது. இவர்களுள் பலர் இப்பொழுது விளங்கும் புகழ்பெற்ற தெய்வத்தலங்களுள் சீவ சமாதியுற்றுள்ளனர் என்று கூறுகின்றனர். திருபலராமையா அவர்கள் எழுதிய சித்தர் மெய்ப்பொருள் என்னும் நூலில் இவ் விவரம் தரப்பெற்றுள்ளது.

சித்தர்கள் முதற்கண் எங்கு தோன்றினர் எங்கெங்குப் பரவினர் மூலச் சித்தர்கள் யார் அவர்கள் வழிவந்தவர் யார் யார் என்பதைத் தெளிவாகக் காண வியலவில்லை வரையறை செய்ய இயலாமைக்குக் காரணம் சித்தர் நெறி என்பது ஒரு குறிப் பிட்ட சமய நெறியன்று வைதீகச் சமயப் பிரிவுகளாகிய சைவம் வைணவத்தைச் சார்ந்தவர்களும் வேத நெறிகளுள் சிலவற்றை மறுத்துத் தோன்றிய சமணம் (ஜைநம்) பவுத்தம் ஐரோப்பிய நாட்டில் தோன்றிய கிறித்துவம், இசுலாமியம் முதலிய

சமயத்தைச் சார்ந்தவர்களும் சித்தர்களாகக் காணப்படுகின்றனர் எனவே, சித்தர்கள் இன்ன சமயத்தைச் சார்ந்தவர்கள் என வரையறுக்க இயலாவண்ணம் அவர்தம் கோட்பாடுகள் இருத்தலோடு சமயங் கடந்த நிலையிலும் காணப்படுகின்றனர் பலர் பல இடங்களிற் சமய வேறுபாடுகளைக் கண்டிப்பதோடு சமயங்களையே கண்டனம் செய்கின்றனர். கடவுட் கொள்கையளவில் தாம் மெய்யெனக் கண்ட சித்தாந்தங்களைக் காரண காரிய அடிப்படையில் உலகுய்ய எடுத்துக் கூறியவர், கூறுபவர்களைச் சித்தர்கள் என ஒருவாறு கூறலாம்

இவ்வாறு முடிவு செய்தால் வேதகால முனிவர்கள் அவதாரக் கடவுளர்கள், சமண சமய தீர்த்தங்கரர்கள், புத்தர்கள், கன்பூசியசு. இயேசு, நபிகள் சங்கரர் இராமாநுசர், சைதன்யர், மாத்துவர், தாயுமானவர் இராமலிங்க சுவாமிகள் ரமணர் காந்தியடிகள் போன்ற யாவரும் சித்தர்களேயாவர். இப்பொழுது விளங்கும் சாயிபாபா போன்றவர்களையும் ஒரு சாரார் சித்தர்கள் என்றே கருதி வழிபடுகின்றனர் எனினும் இவர்களைச் சித்தர்கள் எனக் கொள்ளாமைக்குக் காரணம் இவர்களுள் பலர் தங்கள் கொள்கைகளுக்குச் சடங்கு உருவங் கொடுத்து ஒரு சமயமாக நிலைப்படுத்தி சீட பரம்பரைகளைத் தோற்றுவித்து வழிபாடு முதலிய கடமைகளை நியமித்துக் கொண்டவர்களாகின்றனர் சிலர் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தவர்களாகின்றனர். எனவே சித்தர்களாக ஈண்டு நாம் காணும் அளவைக்கு அப்பாற்படுகின்றனர்.

சித்தர் நூல்களில் இன்னார் முதல்வர் அவர் வழி வந்தோர் இவரிவர் என்னும் வரையறை காணப்படவில்லை சோதிட நூல் மருத்துவ நூல் தனிப்பாடல்கள் இவற்றுள் காணப்பெறும் சித்தர்களைச் சமய வரலாறுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஒருவாறு வரையறை காணலாம். ஏன்எனின் சித்தர்களாகக் குறிக்கப்பெற்றவர்களுள் சிலர் முனிவர்களாகவும் நாயன்மாராகவும் அடியார்களாகவும் சமய நூல்களுள் காணப்பெறுதலால் எனலாம்.

அகத்தியர், வான்மீகி கௌதமர் பதஞ்சலி முதலியோர் முனிவர்கள் திருமூலர், கருவூரார் முதலியோர் நாயன்மார்கள். திருவள்ளுவர் ஔவையார் முதலியோர் தெய்வப் புலவர்கள். பட்டினத்தார், பத்திரகிரியார், முதலியோர் ஞானிகள். தன்வந்திரி, போகர், புலிப்பாணி தேரையர் போன்றோர்

மருத்துவ ஞானிகள். ஆதலின் சித்தர்கள் வரலாற்றை சமய நூல்கள் வாயிலாகத் தான் ஓரளவு காண இயலும்.

இனித் திருமூலர் தாயுமானவர் தம் வாய்மொழி வாயிலாக நோக்கின் நந்தியெம்பெருமானே மூலச் சித்தர் என்றும் தட்சணா மூர்த்தியே மூல சித்தர் என்றும் கருத வேண்டியுளது. நந்தி யெம்பெருமானே திருமூலராகத் தோன்றினர் என்றும் திருமூலர் மரபிலே மற்றைய சித்தர்கள் தோன்றினர்கள் என்றும் சைவ நூல்கள் கூறுகின்றன. "மூலன் மரபில் வரும் மௌனகுரு" என்பார் தாயுமானவர்

நந்தியருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றி வரென்னோ டெண்மரு மாமே
— என்பார் திருமூலர்.

சித்தர்களின் காலம்

சித்தர்களின் காலத்தை வரையறை செய்ய இயலாது வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்து இற்றைவரையும் சித்தர்கள் இருக்கின்றார்கள் ஆதலின் குறிப்பிட்டு ஒரு காலத்தை கூற வியலாது. அகத்தியர் - வான்மீகர் திருமூலர் போன்ற சித்தர்கள் மிகமிகத் தொன்மையானவர்கள், ஞானவெட்டியான் முதலிய நூல்களை இயற்றியவர் திருவள்ளுவர் எனக் கூறப்படுகின்றது நூல் நடையை நோக்கின் திருக்குறளுக்கும் ஞான வெட்டியான் என்னும் நூலுக்கும் மிக மிக வேறுபாடுள்ளது. இவ்வாறே சித்த மருத்துவ நூற் பாடல்கள் நடையும் உளது. அவற்றுள் மிகமிகப் பிற்காலத்து வழங்கிய சொற்களும் கண்ணாடி பீங்கான், சீசா, முதலிய திசைச் சொற்களும் இழிவழக்குச் சொற்களும் காணப்படுகின்றன யாப்பு முறையும் பிற்காலத்தது தென்பாங்கு. சிந்து கும்மியமைப்புக்களிலும், கண்ணியமைப் புக்களிலும் பலருடைய பாடல்கள் உள. எனினும் அவற்றுள் கூறப்பெறும் மருந்து முதலிய பொருள்களேயன்றி, யோகம் ஞானம் தத்துவம் மந்திரம் முதலிய பொருள் மிகமிகத் தொன்மை வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை எனவே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தே விளங்கிய சித்தர்களின் கருத்து கள் வாய்மொழியாகவே குருசீட பரம்பரையாக வழங்கி

வந்து இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் சித்தர் நெறியைப் பற்றி வாழ்ந்த பெருமக்களால் எழுத்துருவம் பெற்று வழங்கி வருகின்றன எனக் கருத வேண்டியுளது.

சித்தர் கருத்துக்கள் எழுத்துருவம் பெற்ற காலத்தை ஓராற்றான் வரையறைசெய்யப்புகின் கி மு விலிருந்தே கி. பி. இருபதாம் நூற்றாண்டு வரை என வரையறுக்கலாம். சித்தர் ஞானப் பாடல்கள் எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் நூல் வடிவம் பெறத் தொடங்கியிருக்க வேண்டும் கருவூரார் கபிலர் போன்றவர்கள் இக்காலத்து வாழ்ந்தவர் என வரலாறு கூறுகின்றது. பனிரண்டு பதின்மூன்றும் நூற்றாண்டுகளில் சில நூல்கள் எழுத்துருவம் பெற்றிருக்கலாம். மருத்துவ நூல்களில் பெரும்பாலன பதினாறு பதினேழாம் நூற்றாண்டில் எழுத்துருவம் பெற்றவை என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

பிற்காலத்தில் சித்தர் நெறிபற்றி வாழ்ந்த பெருமக்கள் பலரும் தங்கள் இயற்பெயரை விட்டுப் பழம் பெரும் புகழ்வாய்ந்த சித்தர்களின் பெயர்களையே தாங்கி அவ்வக் காலத்தில் வாழ்ந்த பாமரமக்களும் சித்தர்களின் கருத்துக்களை உணர்ந்து உய்ய வேண்டும் என்னும் அருள் நோக்கத்தால் எளிய சந்தங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் அமைப்பில் ஆழமான தத்துவங்களையும் ஞானயோக நெறிமுறைகளையும் மறைமுகமான குறிப்புச் சொற்களால் மருந்து இரசவாதம் காயகல்பம் முதலிய கலைகளையும கூறியுள்ளார்கள் என்று கொள்வதே பொருந்துவதாகும்.

எனவே சித்தர்களின் காலம் சித்தர் நெறி தோன்றிய காலம் என ஒருவாறு கூறலாம். குறிப்பிட்டு அந்த அந்தச் சித்தரைப்பற்றி ஆராயுங்கால் தனிப்பட்ட அவ்வவர் காலத்தைக் காணலாம்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

தமிழ்த்துறை

பதின்மூன்ருவது கருத்தரங்கம்

தொல்காப்பியக் கருத்தகம்-1.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை பதின் மூன்ருவது கருத்தரங்கு தமிழுக்கு முதன் நூலான தொல்காப் பியத்தினைப் பற்றி செப்டம்பர் 16, 17 ஆம் நாட்களில் விரிவாக ஆய்வு நிகழ்த்தியது. கடவுள் வாழ்த்து, நிறுவியோர் வாழ்த் தொடு அரங்கம் தொடங்கியது. ஆசிரியர்களும் மாணவர்களும் இதில் திரளாகக் கலந்து கொண்டனர்.

இந்திய மொழிப்புல முதன்மையர், தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கனுர் தம் தலைமை உரையில் தொல் காப்பியம் இன்றுவரை தமிழ்ப் பண்பாட்டிற்குக் கருவூலமாக விளங்குகின்றது. எனவும், இன்று வரும் கவிதைகள் கூடத் தொல்காப்பியத்தின் வழியாகவே செல்லுகின்றன எனவும். ஆங் கில இலக்கிய அறிவிற்கு விவிலிய நூல் இன்றியமையாதது போல எக்காலத்தும் தமிழ் இலக்கிய அறிவிற்கு அடிப்படை யாகத் தொல்காப்பியக் கல்வி வேண்டற்பாலது எனவும் அதன் சிறப்பைப் புலப்படுத்திஞர்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பொறியியற்புல முதன்மை யர், வேதிப் பொறியியற் பேராசிரியர் டாக்டர் சோம இலக்கு மணன் தமிழ்த்துறை ஆறுண்டுகளாகப் பன்னிரண்டு கருத் தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி வருவதையும் இருநூறு ஆய்வுக் கட்டுரைகள் படித்திருப்பதையும் பாராட்டி, பல்கலைக் கழகம், தொல்காப்பியம் பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்ட நூல்களை எடுத்துக் கூறினர்.

16 — 10 — 76 சனிக்கிழமை பிற்பகல் ஆசிரியர் திரு. ஆ. இராமசாமிப் பிள்ளையின் தலைமையில் கருத்தரங்கின் முதல் அவை தொடங்கிற்று திரு. சு சாமிஐயா கிளவியாக்கத்தின் தனிச் சிறப்பு என்னும் தலைப்பில் சொல்லதிகாரத்தில் பின்னே யுள்ள எட்டு இயல்களுக்கும் வேண்டிய தொடர்மொழி இலக் கணங்கள் எல்லாம் இந்த ஒரே இயலில் பொதிந்துள்ளது என்று கூறினர். தொல்காப்பியமும் உரையாசிரியர்களும் என்ற ஆய்வுரையில் டாக்டர் கொ. இலக்குமணசாமி பொருத்தமான

வற்றையெல்லாம் தந்து விளக்குவதே உரையின் இயல்பு எனத் தொல்காப்பியர் கூறியிருப்பதற்காக நச்சினார்க்கினியர் தம் கருத்திற்கு ஏற்ப நூற்பாவைக் கொண்டு கூட்டியிருப்பது ஏற்க இயலாது எனச் சுட்டிக் காட்டினார். திரு. து பட்டாபிராமன் அகத்திணையியலும் நம்பியகப்பொருளும் என்னும் தம் கட்டுரையில் தொல்காப்பியம் கூறிய பெருந்திணையை அகப்புறப் பெருந்திணையெனவும் கைக்கிளையை அகப்புறக் கைக்கிளையெனவும் நம்பியகப்பொருள் வேறுபடக் கூறுவதைக் காட்டினார். புறத்திணையியலும் புறநானூறும் என்னும் கட்டுரையாளர் திரு. பெ. இலக்குமி நாராயணன் புறநானூற்றில் வரும் பாடல்களைப் பன்னிரண்டு திணைகளாகத் தொகுத்துக் காட்டி தொல்காப்பிய முறைப்படியே துறைகள் வகுக்காத பிழைகளை எடுத்துக் காட்டினார் திரு வெ. பழநியப்பன் பொருளியலின் தனிச்சிறப்பு என்னும் தம் கட்டுரையில் பொருளியல் எனப் பெயர் பெற்றிருந்தும் புறப்பொருள் பற்றி இவ்வியலில் யாதொரு இலக்கணமும் கூறப்படவில்லை என்றும் முழுதும் அகப்பொருள் இலக்கணமே கூறப்படுகின்றது என்றும் முன் உரையாசிரியர்களை மறுத்து மொழிந்தார்.

17—10—76 ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் கருத்தரங்கின் இரண்டாம் அவை தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியர் திரு. க வெள்ளைவாரணம் தலைமையில் நிகழ்ந்தது திரு. ஆ. இராமசாமிப் பிள்ளை, தொல்காப்பியத்தில் தெய்வக் குறிப்புக்கள் என்ற உரையில் வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப என்பதனால் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வழிபடு தெய்வங்களும் குல தெய்வங்களும் பண்டே இருந்தன என்றார். அகத்திணையியலும் காமத்துப்பாலும் என்ற கட்டுரைக்கண் திரு அ. ஆனந்தநடராசன் திருவள்ளுவர் கைக்கிளைப் பெருந்திணைகளைத் தமது காமத்துப்பாலில் கூறவில்லையெனவும் அகத்திணையியலுக்கு, காமத்துப்பால் உரையைப்போல விளக்கமாக அமைந்துள்ளது எனவும் மேற்கோள் காட்டி மொழிந்தார். பிறப்பியல் என்ற கட்டுரையில் டாக்டர் மு, கோவிந்தசாமி அ இ உ என்ற சுட்டுக்கள் உலகத்தையே மூன்றாகப் பகுக்கும் பொருண்மை காட்டுவன எனவும் ஆய்தம் பிற ஒலிகளையெல்லாம் சொல்லுதற்குரிய கருவியெனவும் குறிப்பாகக் கூறினர். திரு. ஆறு அழகப்பன் பெருந்திணை என்ற கட்டுரைக்கண் இச்சொல்லுக்கு முன்னை உரையாசிரியர்களும் தமிழ்க் காதல் நூலுடையாரும் கூறும் பொருள்களை நிரல் பட எடுத்துக்காட்டியும் பிற துறையாளர்கள் கருத்துக்களை ஒப்பிட்டுக் காட்டியும் மனத்துக்கு இன்பம்

தரும் காதல் எல்லாம் பெருந்திணைகளாகக் கொள்ளப்படும் என்று வரைபடங்களோடு விளக்கினார். தொல்காப்பியர் வலியுறுத்தும் மரபுகள் என்ற ஆய்வுரை படித்த திரு செ சந்திர சேகரன் பொருளதிகாரத்து வரும் மரபுகளையெல்லாம் தொகுத்துக்காட்டி மரபின் சிறப்பினை வலியுறுத்தினார். டாக்டர். ந. வீ. செயராமன் தொல்காப்பியமும் யாப்பியல் வளர்ச்சியும் என்ற தம் ஆய்வுரையில் செய்யுள் உறுப்புக்கள் இருபத்து ஆறனுக்கும் எட்டிற்கும் இடையமைந்த வேறுபாட்டைக் காட்டி நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பெனவரும் தொடருக்குச் செய்யுள் என உறுப்பென என இயைத்துப் பொருள் கூறுவது தெளியப்படும் என்று கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் கருத்தரங்கின் மூன்றும் அவை தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். வ சுப மாணிக்கனார் தலைமையில் நடைபெற்றது. திரு, அழ பழநியப்பன் தொல்காப்பியத்தில் இலறைக் கருத்துக்கள் என்னும் தலைப்பில் இனப்பெருக்கத்திற்கும் இனக்கட்டுப் பாட்டிற்கும் உரிய வழியை பூப்பின் புறப்பாடு என்ற தொல்காப்பிய நூற்பாவில அன்றே காணலாம் என்று குறிப்பிட்டார் தொல்காப்பியர் நடை என்ற தலைப்பில் ஆய்ந்த திரு சி. வேங்கடபதி பிறர் நடை புறநடை எனப் பகுத்துக்கொண்டு தொல்காப்பியத்தில் பிறர் கூறுவனவாக வரும் நடைகளோ மிகுதியெனவும் என்ப எனவரும் நடைகளை அசைகளாகக் கொள்ளலாம் எனவும் மொழிந்தார் திரு சி. சிவசங்கரன் செய்யுளியலின் தனிச் சிறப்பு என்னும் கட்டுரையில் தம் காலத்து வழங்கிய செய்யுட்கு மட்டுமின்றி எதிர்காலத்தில் தோன்றும் செய்யுள் வகைகளுக்கும் செய்யுளியலில் இடம் உண்டு என்று சுட்டிக் காட்டினார். திரு. க. இராமச்சந்திரன் உரையாசிரியர்களின் உவமைகள் என்ற தலைப்பில் இளம்பூரணரின் எழுத்ததிகாரத்தில் வரும் உவமைகள் சிலவற்றைத் தொகுத்துக் கூறினார். தொல்காப்பியத்தில் உயிரினப் பெயர்கள் என்ற கட்டுரை வழங்கிய திரு அ. முத்துவேலன் தொல்காப்பியர் காலத்து வழக்கிலில்லாத உயிர்ப்பெயர்கள் பின்னர் வழக்குக்கு வந்திருப்பதை எடுத்துக் காட்டினார் திரு. த. இராசவன்னியன் தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல் என்ற கட்டுரைக்கண் மெய்ப்பாடுகளின் இயல்பை அறிவதற்கு ஐம்பொறிகளின் இயல்பும் அவற்றின் போக்கும் பற்றிய அறிவு வேண்டும் என்று கூறினர் திரு. சி. நம்மாழ்வார் உரைகளில் வரும் இதிகாசக் குறிப்புக்கள் என்ற கட்டுரைக்கண் இராமாயணம், பாரதம் பற்றிய மேற்

கோள்களையெல்லாம் எடுத்துக்காட்டி இந்நூல்களின் வரும் நிகழ்ச்சிகள் தொல்காப்பியத்திற்குப் பொருந்துவனவே என மொழிந்தார். திரு. க வெள்ளைவாரணம் சில நூற்பாக்களின் பொருள் விளக்கம் என்ற ஆய்வுரையில் உஊகாரம் நவ்வொடு நவிலா எனவும் எல்லேயிரக்கம் எனவும் நூற்பாக்கள் இருந் திருத்தல் வேண்டும் என்று கூறி முந்நாள் அல்லது துணை யின்று கழியாது என்ற நூற்பாவில் துணையென்பது பாங்- கனைக் குறியாது தோழியைக் குறிக்கும் என்றும் ஓரை என்பது முகூர்த்தத்தைக் குறியாது விளையாட்டைக் குறிக்கும் எனவும் பொருள் விளக்கம் செய்தனர்

பூண்டி புஷ்பம் கல்லூரி முதுகலைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. மா பரிமணம் ஏனைக் கருத்தரங்குகளைவிட தொல் காப்பியக் கருத்தரங்கு ஆய்வாளர்களைச் சோதிப்பது எனவும் மாணவர்களுக்கு நல்ல அறிவூட்டுவது எனவும் பாராட்டினார் அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழித்துறை இயக்குநர் டாக்டர். ச அகத்தியலிங்கம் தொல்காப்பியத்தின் பெருமையை இன்று மொழி நூலார் நன்கு உணர்ந்துள்ளனர் எனவும் மொழியியல் அறிஞர் சாம்ஸ்கி தொடரிலக்கணக் கூறுகள் பற்றிக் கண்டு பிடிப்பதற்கு முன்பே தொல்காப்பியத்தில் அது காணப் படுகின்றது என்றும் இனம் சுட்டும் அடை இனம் சுட்டா அடை என்பது இதற்கு ஒரு எடுத்துக்காட்டு எனவும் கூறினார்.

கலைவர் டாக்டர். வ சுப. மாணிக்கனார் தம் முடிப்புரையில் சாதி சமயம் கட ந்த சமுதாயத்தை அமைக்க முன்னேக்கிச் செல் லும் இந்தியாவிற்குத் தொல்காப்பியம் பொருளதிகாரம் சிறந்த வழிகாட்டியெனவும் இந்திய தொல் இலக்கண நூல்களில் ஒன்றான இத்தொல்காப்பியத்தில் பல்வேறு துறைகள் அடங்கி யுள்ளன எனவும் இப்பெரு நூலையும் இதன் உரைகளையும் வழிவழி வந்த ஆய்வுகளையும் ஒழுங்குபடுத்திப் பல மொழி களில் வெளியிடுவதற்குத் தொல்காப்பியர் பெயரால் தனி ஆய்வு நிறுவனம் இருந்தாற்றான் முடியும் எனவும் வலியுறுத் தினர். கூட்டமுடிவில் திரு. சிவ திருநாவுக்கரசு நன்றிகூற நாட்டு வாழ்த்தொடு கூட்டம் முடிவுற்றது

ஆடி இதழின் தொடர்ச்சி

குறளில் வீட்டியல்

K சோமசுந்தரம், B. A., B L, தஞ்சை

அறத்தின் வலிமையை. முப்பால் வாயிலாக வற்புறுத்தி உலக வாழ்வில் பொருளின் துணைகொண்டே வீடு பயக்கவல்ல அறிவால் அற நிகழ்ச்சியும். இன்ப நுகர்ச்சியும் அறிவு நெறியில் திகழவும், இறையுணர்விலும் உண்மையிலும் உறுதிப்பாடு மேம்படவும். வள்ளுவர், கடவுள் வாழ்த்தில் பொருளையும் இன்பத்தையும் அறத்தில் திகழ வைத்து, அறம் பொருளின்ப வாழ்வின் பயனாக அமைந்துள்ள வீட்டையும் மொழிந்தாராயினும் அவரது குறணூல் பொதுவாக பாயிர வாயிலாகவும் நூலின் வாயிலாகவும் வீட்டறத்தோடு பொருந்திவரும் நூலாக விளங்குகின்றது. அறத்தினை அடிப்படையாகக் கொண்டு, பிறர் நலங் கருதி ஒப்புரவிலே ஈடுபட்டு வீடடைய, வாழ்வினை மக்கள் நடத்த வேண்டுமென்பது வள்ளுவரது உள்ளக்கிடக்கை. இதனாற்றான், பெரு நாவலர், அறநெறி சார்ந்தொழுகுபவரது உலகியற் சிறப்பு, செல்வத்தின் வாயிலாக எழும் அறத்தின் பெற்றியால் ஓங்குவதினுன், அது வீடு பேற்றிற்குத் துணை நிற்கும் எனும் கருத்தும் கொண்டார். இத்தகைய அறம். உயிருக்கு மனத் தூய்மையினை அளித்து உலகிருள் அகல மெய்ப்பொருளைக் காணுமாறு அதனை ஒளியுறச் செய்கின்றமையான். அறமாவது மனமாசற்ற நிலையெனவும் அதனைப் போற்றும் வழியினையும் தேவர் எடுத்துக் காட்டுகிறார்.

உணர்வு எழுச்சியினின்றும் தோன்றும் மனம் பற்றுவழி நற்செயல் பயனில்லை பொறி வாயிலாக எழும் ஐம்புலனுக்கும் ஊற்றாக அமைந்துள்ள மனம் நல்வழிப்பட, புலன்கள் செம்மையுறல் வேண்டும். மனத்தின் வழி உரையும் உரையின் வழிச் செயலுமாக உலகியல் நடைபெற்று வருவதை உன்னற்பாலது. இறைவன் பொறிகளைத் தந்தருளியது. அவனையே பொருளாகக் கொண்டு அனுபவித்தல் வேண்டுமென்பது வள்ளுவரது கருத்து அதுபோதுதான், உயிர் தூய பொறியுணர்வும் மனவுணர்வுங் கொண்டு, இருமை வகை தெரிந்து முறையே உலகையும் இறைவனையும் செவ்வனே உணர இயலும் பழக்க வழக்கத்தைத் தழீஇய நல் ஒழுக்கத்து நிலையினை வாழ்க்கையில் கடைப் பிடியாகக்கொள்ளும். ஒழுக்கம் எத்தகையதென்பதை

'விள்ளற இருமையும் விளங்கத் தன்னுள்ளே
எள்ளிதன் தரித்தலை ஒழுக்கம் என்பவே'

எனச் சிந்தாமணி (2845) வலியுறுத்தலைக் காண்க. இணை நந்தமைந்தொழுகும் நயப்பாடுடைய பண்பும் பாடறிந்தொழுகும் தொடர்ப்பாடுடைய நேர்மை ஒழுக்கமும் வீடு பேறுதரும் வாழ்க்கையை உருவாக்கி ஒழுங்குபடுத்தும். இதனை

'செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்"

என்ற சங்கச் செய்யுள் தெளிவுறுத்தும். மாறிப் பிறத்தல் காரண காரிய தொடர்புடையதாய்க் கரையின்றி வருவதால் 'மாறிப் பிறப்பின் இன்மை' யால் பெறவரும் வீடு பேறு மனிதப் பிறவியின் பயன் எனக் கொள்க. இத்தகைய நல்வினை ஒழுக்கத்தில் மக்கள் வழுவாது நிற்க, அறத்தின் பாற்பட்ட ஒழுக்கத்தை இல்லற ஒழுக்கமெனவும் துறவற ஒழுக்கமெனவும் வள்ளுவர் வகுத்துள்ளார்.

தெய்வப் புலவரின் கருத்துப்படி, இல்லறமென்பது விருந்தினரை யோம்பல், துறந்தார்ப் பேணல் சுற்றந் தழுவல், வறியார்க்களித்தல், ஒப்புரவாற்றல் முதலாய அறத்துறைகளின் கண். அவ்வறத்தில் ஒழுகுவாரை தூய்மைப்படுத்தி பிறப்பின் பயனை எய்தி வீட்டின்பத்தில் நிலைபெற நிறுத்தும் நங்கூரம்- நல்லறங்களின் வழி நிற்கும் இல்லறத்தான் அன்பினை ந் திணையிலமைந்தடங்கும் நற்பேரின்பிற் பழகிப் படிந்து துறவு நிலையில் அருள்பெறுகுவதை வள்ளுவர் தம் நூலில் படிப் படியாக விளக்கமுறக் காட்டியுள்ளார். வீடு பெறுதற்குரிய இத்தகைய இல்லறத்தைக் கடும்பொடும், அன்பு அறிவு ஆற்றல் வழிபுரியின் அது இறைவன் திருவருளுக்கு இலக்காகி எஞ்ஞான்றும் அழியாத பேரின்பப் பெருக்கினை விளைவிக்கும். இதனுனே அறிவு நெறியை நன்குணர்ந்த வள்ளுவர், உள்ளத்திற்கு உணர்ச்சியூட்டும் அன்பு நெறியைப் போற்றி, அதனை இல்லறத்தார் அனைவராலும் எளிதே கடைப் பிடித்தற்குரிய நெறியென இல்லறவியலில் பெரிதும் விதந்து உணர்த்தி அந்நெறியால் வினையும் மெய்யுணர்வோடு பிறப்பு நீங்கிப் பேரின்பம் பெறும் வழித்துறைகளையும் புலனாக வைத்தார்.

இல்லறம் இவ்வாறு இறைவன் திருவருளுக்கு ஏற்றுகின்ற நற்புணையாதலான் இல்வாழ்க்கை முறையினை ஒழுக்கமுற நடத்

தும் காதலை 'காமத்துக்காழில் கனி,' என அதன் விழுமிய சுவை பயந்து நிற்கும் இயல் புணர்ந்து அருள்வாராயினர். 'காதற் காமம் காமத்துச் சிறந்தது' என்பது பரிபாடல். என்னெனில் அது இறைபால் விரும்பி வேண்டப்படும் பொருளாகிய பிற வாமையினை எளிதே தருதலானென்க காதல் தத்துவம் தோன்றி வளர்ந்து ஓங்கி விரியும் பேரழகை முதற் பாவலர் கண்டு அதனை வீட்டியல் நறுமணம் வீசும் அறமலரில் வைத்துப் பொள்ளெனப் புலனுகும் வண்ணம் உய்த்துணர வைத்துள்ளார். மற்றும் அறம் பூத்து அன்புடன் அருளே கனிய நிற்கும் தெய்வவுணர்ச்சியுடைய காதலைப் பரலில்லாத பழம் என நயம்படக் கூறி. அது திகைத்திடும் பிறவியை ஈனும் வித்தினையில்லாதது எனவும் குறிப்பிப்பாராயினர், இறைவனது திருவருளுற்று வீடு பெறுதலுக்கு இல்லறத்துக் காதல் இன்றியமையாத ஓர் சிறந்த கருவியாய் விளங்கும் உண்மையினை

'காமஞ் சான்ற கடைக் கோட்காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறப்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'

என்ற தொல்காப்பிய நூற்பாவினுல் தெளியப்படும் மனையறத்துப் புரைசேர் காதலையுடைய காமமே அறிவைப் பெருக்கி வாழும் உயிர்களுக்கு உறுதி நிலை பயந்து உயர்நிலையினை அளிப்பதால். இதனை இன்னிலைப் பேராசிரியர், 'காதலும் ஆக்கி அளித்தழிக்கும் கந்தழியின் பேருருவே' என்பர், இறை இல்லற நெறியில் மறைமுகமாக அன்பை விளைவித்து அவ்வன்பைக் கொண்டே தன்னையே அடையும்படிச் செய்த வள்ளற்றன்மையினை உன்னுக. இஃதே தெய்வத் திருக்குறளின் நல்லறிவுறாஉவாகுமென்பது ஈண்டு கருத்தூன்றி நினைப்பிலிருத்தற்குரியது எனவே இறைபால் அன்பு பூண்டு தெய்வ உணர்வொடு துறந்தஉள்ளமுடன் உயிர்களுக்கு அருள் புரிந்து வீடுபேறு பெறுவதற்காகவே தகுதி வாய்ந்த இவ்வுடல் காமனுக்கே உரியதாகாதபடி கவனமுற்றவர்க்கே, இறைப்பேறும். திருவருள் விளக்கமும் வீட்டின்பமும் சித்திக்குமென்க

— தொடரும்

புரட்டாசி இதழின் தொடர்ச்சி

பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு தரும் வரலாறு

பேராசிரியர். சி. கோ. தெய்வநாயகம்.
எம். ஏ., பி எசி, டிப்-இன்-அக்ரி சர்டிபிகேட்-இன்-எபி.

பழையாறை சோழ மரபினர் வாழ்ந்து வரும் திருவிடம் வாரிசுகளோ சிறு குழந்தைகள். அவர்களுக்குத் துணையோ பெண்டிர். சூழ் நிலையோ கொந்தளிப்பான சூழ்நிலை இராச ராசனுக்குப் பிறகு ஆட்சியினைக் கைப்பற்றலாம் என்றெண்ணி யிருந்த பங்காளிகளுக்கு ஏமாற்றம். அரசன் நோயுற்றிருந் தமையின், அரச நிர்வாகத்தினை நேரிடையாகக் கவனியாத தாலும் பங்காளிகளின் சூழ்ச்சி அரசியலதிகாரிகள் செய்த நிர் வாகச் சீர்கேடு, சிறு உள் நாட்டுக் குழப்பங்கள். இந்நிலையில் பழையாறையில இக்குழந்தைகள் தங்களைத் தாங்களே காக்கும் வகையறியா பச்சிளம் சிறார்கள். எனவேதான் இக்குழந்தை களையும் பெண்டிர்களையும் இராசராசபுரத்திற்கு அழைத்து வந்து பாதுகாத்திருக்கின்றான். பல்லவராயன் இச்செய்திகளை (7, 8, 9 வரிகளில்) "ஆயிரத் தளியும் விட்டு" எனக் காணப் படும் வரிகள் உறுதி செய்கின்றன. உம்மை தெளிந்த வரலாறு தரும் உம்மையாகக் காணக் கிடப்பதறிக.

1163-ல் இந்நிகழ்ச்சிகள் நிகழ, இரண்டு வயதுக் குழந்தை அபிஷேகத்திற்குரிய திருநட்சத்திரம் வாய்க்கப் பெறுதிருந்த மையால் அமைச்சன் பல்லவராயனே இரண்டாம் இராசராசன் நோய் வாயுற்றிருந்த காலத்தில் எப்படி சோழ அரசினை தானே நிர்வகித்து ஆட்சி செலுத்தினானோ அதே போன்று சிறு குழந்தை மண்டை கவிப்பிக்கப் பெற்றிருந்த போதும் நிர்வகித்து வந் திருக்கின்றான் எனவேதான் இராசராசன் நோயுற்ற காலத் தில் எப்பல்லவராயனின் நிர்வாகத்தின் கீழ் அடங்கியிருந்தார் களோ, அதே பல்லவராயனின் நிர்வாகத்தின் கீழேயே ஆந்தி ரர்கள் அடங்கி இருந்தனர். மேலும் அவர்களுக்கு இராச ராசன் இறந்த செய்தியும் பல்லவராயனால் மறைக்கப்பட்டிருக் கிறது, எனவே இப்பல்லவராயன் இறக்கும் வரை கி. பி. 1172 வரை உண்மையில் சிறு குழந்தையாம் எதிரிலிப் பெருமாளின் (இரண்டாம் இராசாதிராசன்) ஆட்சியில் பல்லவராயனின்

நிர்வாகத்தில் ஆந்திரத்தில் வெட்டப்பட்ட ஒவ்வொரு கல் வெட்டும் இராசராசன் பெயரிலேயே வெட்டப்பட்டன எனக் கொள்தலே சிறப்புடைத்தாம்.

இரண்டு வயதில் மண்டை கவிப்பிக்கப்பட்ட நிலையில் ஒரு குழந்தையால் ஒரு நாட்டை ஆளமுடியாது. முதலில் நடப்பதற் கும், பேசுதற்கும். உண்பதற்கும், உடுப்பதற்கும், குளிப்பதற் கும் போன்ற எல்லாவற்றிற்குமே தெரியாத குழந்தையால் எவ்வாறு ஆட்சி செலுத்த முடியும்? எனவே இப்பல்லவ ராயனே முன்னாட்படியே தானே நிர்வாகம் செய்தான் வாரிசுரி மைகளால் ஏற்பட்ட குழப்பத்தினை எல்லாம் தன் நிர்வாகத்தில் அடக்கி "உடன் கூட்டமும் நாடும் ஒன்று பட்டுச் செல்லும்படி பண்ணுவித்தருளி" சோழ நன்னாட்டினை அமைதியாக சிறு குழந்தையரசனுக்குச் சார்பாக ஆண்டு வரலானான்.

இரண்டாம் இராசராசனுக்குக் குழந்தைகள் கிடையாது என்பதனையும் பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு உறுதி செய்கிறது.

"திருவபிசேகத்திற்குரிய பிள்ளைகள் இன்றியே" (வரி 10) என்பதால் பெறப்பட்ட இக்கருத்தினை அடுத்த "கங்கை கொண்ட சோழபுரத்திலே எழுந்தருளியிருக்கிற பிள்ளைகளை" (வரி 11) எனும் பகுதி உறுதி செய்கிறது. முன்னாளில் அதி ராசேந்திரனுக்குப் பின் முதற் குலோத்துங்கன் எவ்வாறு சோழ அரியணையினை தாய்வழி உரிமையில் ஏற்றானோ அதே போல இப்பிள்ளைகளும் தாய்வழி உரிமையில் சோழ அரசிற்குரிய வராவர் என்பதனை "முன்னாளிலே காரியம் இருந்தபடி" (வரி 11) எனும் பகுதியும் விளக்கிற்று ஏனெனில் எவ்வாறு முதற் குலோத்துங்கனின் தாய் அம்மங்கைதேவி வீரராசேந்தி ரனின் சோதரியோ அதே போல இக் கங்கைகொண்ட சோழ புரத்தெழுந்தருளிய இப்பிள்ளைகட்குத் தாய் இரண்டாம் இராசராசனின் சகோதரியாகிய நெறியுடைப் பெருமாள் என்ப வராவார். இக்கருத்தினை வலியுறுத்துவான் வேண்டியே "உடையார் விக்கிரம சோழ தேவர் பேரனார் நெறியுடைப் பெரு மாள் திருமகனார் எதிரிலிப் பெருமாளை" (வரி 11, 12) எனும் பகுதிகள் விளக்குகின்றன. விக்கிரம சோழனின் பெண்வழிக் கொட்பெயரன் எனவே இவ்வெதிரிலி "முன்னாளில் காரியம் இருந்தபடி" சோழ அரியணை ஏற்கத் தகுதியுடைமை ஈண்டு ஓதப்பட்டதறிக

இவ்வெதிரிலிப் பெருமாள் சிறு குழந்தையாக இருந்தமையினுல்தான் "பிரயாணம் பண்ணுவித்து" எனக் கல்வெட்டு குறிக்கின்றது. ஆயின் சிலர் குறிப்பதுபோல் பத்து நான்கு வயது வாலிபனுக இவன் பட்டம் ஏற்றிருப்பின், முதற் குலோத்துங்கன் சக்கரக் கோட்டத்தினின்றும் தானே வந்து சோழ அரசினை ஏற்றதுபோல் "கங்கை கொண்ட சோழபுரத்தினின்றும்" பிரயாணம் பண்ணி "மண்டை கவித்துக் கொள்ளப் பெற்றுன்" என்பதாகவே கல்வெட்டு அமைந்திருக்கும் எனவே இவனை சிறு குழந்தையாகவே பட்டம் ஏற்றப்பட்டமை கண்டு தெளிக. கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து பெருமானம்பிப் பல்லவராயனும், தாயரும், அந்தப் புரத்தாரும் அழைத்துவந்த அரச வாரிசுகள் ஒன்றல்ல இரண்டாகும் இவ்விரண்டும் ஆண் குழந்தைகள் எனவே "எழுந்தருளிய பிள்ளைகள்" எனக் குறிக்கப் பெறுகின்றனர் ஆக்குழந்தைகளே 10 வது வரியில் குறிக்கப்பட்டனர் இவர்கள் ஒரு வயதும் இரண்டு வயதும் நிரம்பிய குழந்தைகள் ஆவர் என்பதனை 'பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திர மாகையால்" எனும் 7 ஆவது வரி உறுதி செய்கின்றது.

எனவே 7, 10, 11, 12 வரிகளில் காணப்பெறும் செய்திகளை இணைத்து நோக்க "பெரிய தேவர் எழுந்தருளிய நாளிலே திருவபிஷேகத்துக்கு உரிய பிள்ளைகள் இன்றியே இருக்கிற (10) படியைப் பார்த்து முன்னுளிலே காரியம் இருந்தபடி விண்ணப்பஞ் செய்து கங்கை கொண்ட சோழ புரத்திலே எழுந்தருளி இருக்கிற பிள்ளைகளை பிரயாணம் பண்ணுவித்து உடையார் விக்கிரம சோழ தேவர் பேரனுர் (11) நெறியுடைப் பெருமாள் திருமகனுர் எதிரிலிப் பெருமாளை, பெரிய தேவர் துஞ்சி யருளின நாளிலே மண்டை கவிப்பித்துப் போந்தார் . (12) பெரிய தேவர் துஞ்சியருளிப் பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரமாகையால (9) ஆபிரத்தளிப் படை வீடும் விட்டுப்போத வேண்டிப் போதுகிற இடத்துத் திருவந்தபுரமும் . பரிவாரமும் கூட்டிக் கொடு போந்து ராஜராஜ (8) புரத்திலே ..." இளவரசனுக்கப்பட்ட இருவயதுக் குழந்தையாம் எதிரிலிப் பெருமாளையும், ஒரு வயதுக் குழந்தையாகிய அவன் தம்பியினையும், அவன் தாயையும் பரிவாரங்களையும், பாதுகாப்பாக வைத்துப் பல்லவராயன் காப்பாற்றினுன்; எனும் செய்தி புலனுகின்றது அடைக்கலமாகத் தன்பால் வந்த குலசேகர பாண்டியனையே உரிய முறையில் கண்ணிலும் கடியதாகக் காத்த பல்லவராயன் தன் நாட்டு அரசவாரிசினை எவ்வளவு கவனமுடன் காத்திருப்பான் ?

மூன்றும் குலோத்துங்கன் இரண்டாம் இராச இராசனின் மகனல்லன் இரண்டாம் இராசாதிராசனின் தம்பியே ஆவன். நெறியுடைப் பெருமாளின் இரண்டாவது குழந்தையாவான் என்பது இம் மூன்றும் குலோத்துங்கனின்

"பெற்ற தாயாரும் பேருரிமையும் பொருவருதுயர் துணையாக" என்ற மெய்க்கீர்த்தியின் பகுதியால் விளக்கப் பெறுகின்றது.

அரச உரிமையினை தாய் வழியால் அடைந்தவனாகவே இவனே இவனது மெய்கீர்த்தியில் சுட்டிக் கொள்வதாலும், தாய் வழி உரிமையில் ஆட்சி பெற்ற எதிரிலிப் பெருமாளை (இரண்டாம் இராசாதிராசனை) அடுத்து சோழ நாட்டாட்சியினை மேற்கொண்டிருந்ததாலும், இராசாதிராசனே இவனுக்கு சோழ நாட்டினாட்சியினை வழங்குவதாலும் வழங்கியபின், எதிரிலிப் பெருமாள் சோழ தேயத்திற்கடங்கிய ஆந்திர நாட்டினை ஆள்வதாலும், ஓரே காலத்தில் இருவரும் ஆட்சி புரிதலாலும், பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு கங்கை கொண்ட சோழ புரத்திலே எழுந்தருளி யிருக்கின்ற பிள்ளைகள் எனப் பன்மையாற் குறிப்பிடுதலானும் "பெரிய தேவர் துஞ்சியருளி பிள்ளைகளுக்கு ஒன்றும், இரண்டும் திருநக்ஷத்திரமாகையினாலே" என எதிரிலியின் வயது இரண்டெனவும், அவன் தம்பியின் வயது ஒன்றெனவும் அக்கல்வெட்டு குறிப்பதாலும், இரண்டாம் இராசராசனுக்கு வாரிசு இல்லாமையாலேயே நெறியுடைப் பெருமாளின் பிள்ளைகளில் இரண்டு வயது நிரம்பியவனும், மூத்தவனுமாகிய எதிரிலியே இராசராசனால் இளவரசுப் பட்டம் கட்டப் பெற்றிருத்தலாலும், சோழ நாட்டின் பெரும் பரப்பினைத் தனி ஒருவனாக ஆளாது தம்பியையோ அன்றி மகனையோ ஆங்காங்கு ஆளுகைத் தலைவனாகச் செய்து தானுமோர் பகுதியினை ஆள்வது முதல் இராசராசன் கால முதலாகவே சோழ அரசாட்சியில் இடம் பெற்றிருக்கும் வரலாருதலானும், மூன்றுங் குலோத்துங்கன் அபிஷேகப் பெயர் பெற்று ஆண்ட மன்னன் இரண்டாம் இராசாதிராசன் என்ற அபிஷேகப் பெயர் பெற்று எதிரிலிப் பெருமாளின் தம்பியும், இரண்டாம் இராசராசனின் சகோதரியாகிய நெறியுடைப் பெருமாளின் மகனுமேயாவான் என்பது நிலைநிறுத்தப்பட்டமையறிக.

— தொடரும்

பாய்கலைப்பாவை (Mrigavarini)

ஏ. ஏகாம்பரநாதன்,
தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

பண்டைத்தமிழ் மக்கள் கொற்றவையைப் பாலை நிலத்திற்குரிய தெய்வமாக வழிபட்டு வந்துள்ளனர். புவியியற்படி பிரிக்கப்பட்ட ஐவகை நிலங்களுக்குரிய கடவுளரில் கொற்றவை மட்டிலும் பெண் தெய்வமாகும். தமிழரால் வழிபடப்பட்டு வந்த இத்தெய்வம் ஆரியப் பண்பாட்டுக் கலப்பினால் துர்க்கை வழிபாட்டுடன் இணைக்கப்பட்டு, கொற்றவையும், துர்க்கையும் ஒன்றெனக் கருதப்படலாயிற்றென்பது அறிஞர் பலரது ஆய்வுரையாகும் சங்க காலத்தில் பாலைநில மக்களால் வழிபடப்பட்டு வந்த இத்தெய்வம் படிப்படியாகப் பிறநிலப் பகுதிகளுக்குரிய மக்களாலும் வணங்கப்பட்டு வந்தமை பற்றிய செய்திகள் இலக்கியங்களில் பரவலாகக் காணக்கிடக்கின்றன.

கொற்றவை :

தொல்காப்பிய காலத்தில் கொற்றவை மறத் தொழில் புரியும் வீரர்கள் வணங்கும் தெய்வமாகத் திகழ்ந்தாள். [1] சங்க இலக்கியங்களில் இவ்விறைவி பாலை நிலத்திற்குரிய தெய்வமெனவும், போரில் வெற்றியைக் கொடுப்பவளெனவும், [2] எல்லா வல்லமை படைத்த இவள் பெருங்காட்டிலுறைபவள் எனவும் [3] கூறப்பட்டுள்ளது சிலப்பதிகார காலத்தில் கொற்றவை வழிபாடு மிகச் சிறந்திருந்ததை வேட்டுவ வரிப்பகுதியால் நன்கு அறிய வருகிறோம் இத்தெய்வம் நஞ்சுண்டு கறுத்த கண்டத்தினையும், கையில் சூலத்தினையும், யானையின் தோலினை ஆடையாகவும் பெற்று, சிலம்பு. கழல் முதலியனவற்றைக் காலணிகளாக அணிந்து மயிடாசுரன் தலையின் மீது நிற்பவள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அக்கால வேட்டுவ மக்கள் இவ்விறைவிக்கு வண்ணம், சுண்ணம், நறுஞ்சாந்து, பொரி, பூ முதலியன படைத்து வழிபட்டுள்ளனர். [4] காடு கிழாளாகிய இக்கன்னித் தெய்வத்திற்கு அமரி, குமரி, கவுரி, சமரி, நீலி, சூலி, மாலவற்கிளங்கிளை, ஐயை, செய்யவள், பாய்கலைப்பாவை முதலிய பல்வேறு பெயர்கள் அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன, சங்க இலக்கியங்களில் கொற்றவைக்கு சங்கு, சக்கரம் முதலியன படைக்கலன்களாகத் திகழவில்லை. மேலும் இக்காலத்தில் இவள் திருமாலின் தங்கை என்றோ அல்லது உமையவளின் ஒரு

அம்சம் என்றே குறிப்பிடப் படவில்லை. ஆனால் சிலப்பதிகார காலத்தில் (சங்கம் மருவிய காலத்தில்) கொற்றவை திருமாலின் தங்கையாகக் கருதப்பட்டாள் என்பதை 'மாலவற் கிளங்கிளை' என்னும் கூற்றினாலும் உமையன்னையின் ஒரு அம்சமாகக் கருதப்பட்டாள் என்பதனை 'கவுரி' (கௌரி) என்னும் பெயரினாலும் அறியக் கிடக்கிறோம். இதனை நன்கு ஆராயுமிடத்து சிலப்பதிகார காலத்தில் தான் ஆரியப் பண்பாட்டினரால் மலைமகளின் ஒரு அம்சமெனக் கருதப்பட்டு வந்த துர்க்கை, தமிழகத்தில் பாலை நிலக்கடவுளாக வழிபடப்பட்ட கொற்றவையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகும்.[5]

பாய்கலைப்பாவை : (இலக்கியச் செய்திகள்)

வெல்போர்க் கொற்றவைக்குச் சிங்கமும் மானும் ஊர்திகளெனக் கருதப்பட்டுள்ளன. சிங்கத்தினை ஊர்தியாகக் கொண்டவளாதலின் இவள் சிம்மவாகினி என்றும், கலைமானை வாகனமாக உடையவளாதலின் பாய் கலைப்பாவை என்றும் அழைக்கப் பெறுகிறாள். கலைமானினை ஊர்தியாகக் கொண்டவள் பாய் கலைப்பாவை என்பதனை,

"ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்
பாய் கலைப்பாவை பைந்தொடிப் பாவை"

என்னும் பகுதி அறிவுறுத்துகிறது.[6] பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூற்களில் மான் கொற்றவையின் ஊர்தியெனக் கருதப்படவில்லை ஆனால் சிலப்பதிகாரத்திலும். அதற்குப் பிற்பட்ட இலக்கியங்களிலும் கொற்றவைக்கு மான் வாகனமாகத் திகழ்ந்தமை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில், குறிப்பாக வேட்டுவவரியின்கண் பாய்கலைப் பாவையைப் பற்றிய செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. பெருங்கதையில், பாலை நிலக்கடவுளாகிய கொற்றவை கேடயம், வாள், அம்பு, வில் முதலிய எண்வகைப் படைக்கலன்களைத் தன் கரங்களில் பெற்று விளங்குபவள் எனவும், கலைமானைத் தன் வாகனமாகக் கொண்டவள் எனவும் கூறப்பட்டுள்ளது.[7] கலையினைத் தன் ஊர்தியாகக் கொண்ட இறைவி வெற்றியினை அளிப்பவள் என தேவாரம் குறிப்பிடுகிறது.[8] மேலும் கூளிப் படையினைக் கொண்ட கொற்றவை யாளிக் கொடியினையும், பைங்கிளியினையும், பாய்ந்து செல்லும் கலைமானையும் உடையவள் என்பதனை,

"ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை"

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைப் பகுதியால் அறிய வருகிறோம்.[9] கம்ப இராமாயணத்தில் இவ்விறைவி "கலை ஊர்கன்னி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளாள்.[10] பிற்கால இலக்கியமாகிய காஞ்சி புராணத்தில், வெற்றித்திருமகளாகிய கொற்றவை நாற்கரங்களையுடையவளாய், இருகரங்களில் பாசம், அங்குசம் முதலியவற்றைக் கொண்டும், மற்றிரு கரங்கள் அபய, வரதமுத்திரைகளைக் குறித்தும்; கலைமானினை ஊர்தியாகப் பெற்றும், பங்கயக்கிழத்தியராகிய கலைமகளையும், அலைமகளையும் தன் தோழியர்களாகக் கொண்டும் பத்திர பீடத்தின்மீது காட்சியளிப்பவள் என அழகுற கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.[11] மேற்கூறப்பட்டுள்ள இலக்கியச் செய்திகளிலிருந்து சிலப்பதிகார காலத்தில் மட்டுமின்றி பிற்காலத்திலும் கொற்றவைத் தெய்வத்திற்கு மான் ஊர்தியாகக் கருதப்பட்டுள்ளமை அறியற்பாலதாகும்.

சிங்கமும், மானும் ஊர்திகளாக உடைய சிற்பங்கள் :

வாளினைக் கொண்டு வல்லரக்கனை வென்ற வனமோடிக்கு சிங்கமும், மானும் ஊர்திகளாகத் திகழ்ந்தமைக்கு இலக்கியங்களன்றி சிற்பங்களும் சான்றுகளாகத் திகழ்கின்றன. பல்லவர் காலக் குடைவரைச் சிற்பங்களில் மாமல்லையிலுள்ளவராக, ஆதிவராக மண்டபங்களில் இடம் பெற்றுள்ள கொற்றவைச் சிற்பங்கள் இத்தகைய சிறப்பினை உடையவையாகும். வராக மண்டபத்தில் நாற்கரங்களையுடைய தேவியின் தலைக்கு மேற்பகுதியில் வலதுபுறம் சிங்கம், இடதுபுறம் மான் ஆகியவற்றின் தலைப் பகுதிகள் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இது போன்ற அமைப்பு ஆதிவராகர் குடைவரையிலுள்ள எண்கர கொற்றவைச் சிற்பத்தின் தலைக்கு மேற்பகுதியில் இடம் பெற்றுள்ளது. பல்லவர் காலக் கட்டடக் கோயிலாகிய காஞ்சி ஐராவதேசுவரர் கோயிலின் வடபுற தேவ கோட்டத்தில் கொற்றவையின் சிற்பம் காணப்படுகிறது. இத்தேவ கோட்டத்தின் கீழ்புறம் சிங்கமும், மேற்புறம் மானும் சிறியதாக முழு உருவத்துடன் திகழ்கின்றன.

முற்காலச் சோழராட்சியில் கட்டப்பட்ட புள்ளமங்கை, புஞ்சை சிவன் கோயில்களிலுள்ள துர்க்கைச் சிற்பங்களிலும் மான் சிங்கம் ஆகியவை காணப்படுகின்றன. புஞ்சையிலுள்ள

சிற்பத்தில் இறைவியின் தலைக்கு மேலாக வலது புறத்தில் சிங்கமும், இடதுபுறத்தில் மானும் தலைப்பகுதி வரை மட்டிலும் செதுக்கப்பட்டுள்ளன. ஆனும் புள்ளமங்கை துர்க்கை சிற்பம் காணப்படும் தேவ கோட்டத்தில் இருமருங்கிலும், காஞ்சி ஐராவதேசுரர் கோயிலில் உள்ளவை போன்று, மானும், சிங்கமும் முழுமையாக வடிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்

பாண்டி நாட்டில் சிவகங்கை தாலுகாவைச் சார்ந்த திருமலை என்னுமிடத்திலுள்ள மலைக் கொழுந்தீசுவரர் கோயிலுக் கருகில் அழகிய பாண்டியர் காலக் கொற்றவைச் சிற்பம் காணப்படுகிறது. இதில் இறைவி எட்டு திருக்கரங்களுடன் எருமைத் தலைமீது நின்றவண்ணம் காட்சியளிக்கிருள். கொற்றவையின் வலதுபுறம் சிங்கமும். இடதுபுறம் மானும் எழிலுடன் தீட்டப் பெற்றுள்ளதைக் காணலாம். இச்சிற்பத் தொகுதியிலுள்ள மான் இறைவியைத் திரும்பி நோக்கியவாறு உள்ளது.

தமிழகத்தில் மட்டுமின்றி கர்நாடக மாநிலத்திலும் இத்தகைய சிற்பம் ஒன்று கிடைத்துள்ளது. இங்கு காணப்படும் சிற்பத் தொகுதியிலும் சிங்கம், மான் ஆகிய இரு ஊர்திகளும் இடம் பெற்றுள்ளன. பொதுவாக கர்நாடக மாநிலத்தில் கொற்றவைக்கு மான் ஊர்தியாகக் கருதப்படவில்லை. மேற்கூறப்பட்டுள்ள ஒரு சிற்பம் மட்டும் தான் சிங்கத்தினையும். மானையும் பெற்று விளங்குகிறது. எனவே கர்நாடக மாநிலத்தில் மானை கொற்றவைச் சிற்பத்தில் அமைக்கும் வழக்கம் தமிழகத்திலிருந்து பரவியிருத்தல் வேண்டும் எனலாம்.

பாய்கலைப்பாவை சிற்பங்கள்.

மேற்கூறப்பட்டுள்ள சிற்பங்கள் அனைத்திலும் மானும், சிங்கமும் இடம் பெற்றுள்ளன. இவையன்றி மானை மட்டிலும் தனியாகக் கொண்ட பாய் கலைப்பாவை சிற்பங்கள் சிலவும் காணப்படுகின்றன. இவற்றுள் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த பெரிய வெண்மணி என்னும் ஊரிலிருந்து. பேராசிரியர் ஆர். சம்பகலக்குமி, திரு. அ. சுவாமி ஆகியோர்களால் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் துறை அருங் கலைக் கூடத்திற்குக் கொணரப்பட்ட பல்லவர் காலச் சிற்பம் சிறப்பு வாய்ந்ததாகும். ஏறத்தாழ மூன்றரை அடி உயரமுள்ள இப் பாய்கலைப்பாவை, எட்டு திருக்கரங்களுடையவளாய் அவற்றில் சங்கு, சக்கரம், கேடயம், பரசு, ஈட்டி, வில் முதலிய புடைக்

கலன்களைப் பெற்று எருமைத் தலையின் மீது நின்ற கோலத்தில் விளங்குகிறாள். இவளது கீழிருகைகளுள் வலதுகை மார்புக்கெதிராக மடக்கப்பட்டும், இடதுகை பந்து ஒன்றினைப் பெற்றும் காணப்படுகின்றன வலது கையின் முன்பகுதியில் கிளி ஒன்று அமர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும் கொற்றவையின் இருமருங்கிலும் உள்ள அடியவருள் ஒருவர் தனது இடது கையினை வாளால் அரிந்து தேவிக்குப் பலியிடுகிறார். இவ்வன்னையின் பின்பகுதியில் அவளது ஊர்தியாகிய மானின் புடைப்பியற் சிற்பம் அழகுற வடிக்கப்பட்டுள்ளதைக் காணலாம் சிலப்பதிகாரத்தில் குமரிக்கோலம் கொள்ளும் பாய்கலைப்பாவையின் திருவுருவ அமைப்புகள் அனைத்தும் இச்சிற்பத்தில் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். இவ்வரிய கலைச் செல்வம் கி. பி. 7 - 8 ம் நூற்றாண்டு காலவரையறைக்குட்பட்டதென்றும், இராச 'சிம்ம பல்லவன் கலைப்பாணியில் உருவாக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. [12]

தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம் தாலுகாவைச் சார்ந்த எசாலம் என்னும் ஊரில் பிற்காலப் பல்லவர் கலைப் பாணியில் உருவாக்கப்பட்ட பாய்கலைப்பாவை சிற்பம் ஒன்றுள்ளது எட்டு கரங்களையுடைய இப்பாய்கலைப்பாவையின் வலதுபக்க கைகள் தற்போது சிதைந்துள்ளன இடதுபுற கைகளில் கேடயம், வில் முதலியன காணப்படுகின்றன மற்றொரு கை இடுப்பினில் ஊன்றப்பட்டுள்ளது. இறைவியின் திருமேனியில் கரண்ட மகுடம், பத்ர குண்டலங்கள், கழுத்தணி, மார்புக்கச்சை, கேயூரம், கை வளைகள், சிலம்பு முதலியன இடம் பெற்றுள்ளன. இவளது இடதுபுறம் அடியவர் சிற்பமும், வலதுபுறம் கொம்புகளையுடைய மானின் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன. பிற சிற்பங்களைப் போலன்றி. இதில மான் இறைவியின் பின் பகுதியில் காணப்படாமல் அவளது வலது புறத்தில் புன்புடைப்பியற் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். [13]

திருக்கழுக்குன்றம் மூலத்தானேசுரர் கோயிலின் வடபுற தேவ கோட்டத்தில் முற்காலச் சோழர் கலைப்பாணியில் உருவாக்கப்பட்ட அழகிய பாய்கலைப்பாவை சிற்பம் ஒன்றுள்ளது. இவ்வெற்றித் திருமகள் நான்கு திருக்கரங்களுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கிறாள். இறைவியின் திருமேனியில் வனப்புமிக்க மகுடம், கழுத்தணிகள், கேயூரங்கள், கைவளைகள், மார்

புக் கச்சை, மேகலை முதலிய அணிகள் திகழ்கின்றன. இறைவியின் பின்பகுதியில் கூரிய கொம்புகளையுடைய மானின் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பத்தை ஒட்டினாற்போல் பிற்காலத்தில் சுவர் கட்டப்பட்டுள்ளமையால் நேரில் காணும் போது தான் மானின் தலைப்பகுதி நன்கு தெரியும். (இது வரை எடுக்கப்பட்ட நிழற் படங்களில் மானின் சிற்பம் தெரியவில்லை.)

தஞ்சையிலிருந்து சென்னை அருங் கலைக்கூடத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள மற்றொரு சிற்பமும் பாய்கலைப்பாவையைக் குறிப்பதாகும். இச்சிற்பம் எட்டு திருக்கரங்களையுடையதாய், அவற்றில் சங்கு, சக்கரம் கேடயம், ஈட்டி, அம்பு, வில் முதலிய படைக்கலன்களைக் கொண்டு விளங்குகிறது. இறைவியின் பின்புறம் கூரிய கொம்புகளையுடைய கலைமான் காணப்படுகிறது. மானின் கழுத்தில் சிறிய மணி ஒன்று கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பெரிய வெண்மணி சிற்பத்தில் காணப்படும் வழிபடுவோர், கிளி, பந்து முதலியன இச்சிற்பத்தில் இடம் பெறவில்லை. இவ்வரிய பாய்கலைப்பாவைச் சிற்பம் கலைப்பாணியை ஒட்டி சோழர் காலத்தைச் சார்ந்ததெனக் கருதப்படுகிறது. [14]

மான் ஊர்தியாக விளங்கக் காரணம்:

தமிழகத்தில் கொற்றவைக்கு மானை ஊர்தியாகக் கொண்டமைக்குரிய சரியான காரணம் இன்னதென முடிவாகக் கூறுவதற்கில்லை. தமிழ் நாட்டில் சிங்கம் அதிகமாகக் காணப்படாததால் சிங்கத்திற்குப் பதிலாக மானை ஊர்தியாகக் கொண்டிருக்க வேண்டும் எனவும், பழங்குடிமக்கள் கலைமானை வேட்டையாடுவதில் விருப்பமுள்ளவர்களாதலின், அவ் வேட்டையில் வெற்றியை அளிக்கும் கொற்றவைக்கு மானை வாகனமாகக் கருதியிருக்க வேண்டும் எனவும் திரு. பி எல் சாமி அவர்கள் கருதுகின்றனர். [15] ஆனால் இக்கருத்தினைக் காட்டிலும் பின் வரும் காரணங்களே சரியானவை எனத் தோன்றுகிறது. கொற்றவை உமையவளின் ஒரு அம்சம் எனக் கருதப்பட்டதால், உமாபதியின் படைக்கலனாகிய சூலம் கொற்றவைக்கும் படைக்கலனாகத் திகழ்ந்தது. இது போன்று சிவனது கையில் காணப்படும் மானைக் கொற்றவைக்கு வாகனமாக அக்கால மக்கள் வழங்கியிருத்தல் வேண்டும். எனவே கொற்றவை

வழிபாடு, சிவ வழிபாட்டுடன் இணைந்தபோது சிவனது கையினில் திகழ்ந்த மான் கொற்றவைக்கு ஊர்தியாகக் கருதப்பட்டிருக்க வேண்டும் எனலாம். அல்லது கொற்றவை வீரத்தில் சிறந்தவள் என்பதையும், கொடியவர்களை அழிக்கும் வலிமை படைத்தவள் என்பதையும் குறிக்க கொடிய விலங்காகிய சிங்கத்தினையும்; அன்புள்ளமும், கருணையும் கொண்டு உலகைக் காக்கும் தாயானவள் என்பதைக் குறிக்க மென்மைத் தன்மையுடைய விலங்காகிய மானையும் ஊர்திகளாகக் கருதியிருக்கலாம். (மானையும், பெண்டிரையும் தமிழிலக்கியங்களில் ஒப்பிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.) இவ்வாறுயின் கொற்றவையின் குணங்களாகிய வீரத்தினையும், மென்மை (கருணை) யினையும் குறிப்பதற்காகவே சிங்கம், மான் ஆகிய விலங்குகள் ஊர்திகளாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடம் உள்ளது.

இறுவாய்

மேற்கூறப்பட்டுள்ள செய்திகளிலிருந்து தமிழகத்தில் வெல்போர்க் கொற்றவைக்கு சிங்கம் மட்டுமின்றி மானும் ஊர்தியாகத் திகழ்ந்தமை அறியற்பாலதாகும். வடமொழி நூற்களிலும், புராணங்களிலும், ஆகமங்களிலும் பாய்கலைப்பாவையைப் பற்றிய செய்திகள் இடம் பெறவில்லையாதலால் இச்சிறப்பு தமிழகத்திற்கும், தமிழ் இலக்கியங்களுக்கும் உரியதாகும். கர்நாடக மாநிலத்தில் மட்டிலும் ஒரு சிற்பம் கிடைத்திருப்பதிலிருந்து, கொற்றவைச் சிற்பங்களில் சிங்கதினையும், மானையும் அமைக்கும் வழக்கம் தமிழகத்திலிருந்து பரவியிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. தமிழகத்தில் இன்னும் வேறு பாய்கலைப்பாவை சிற்பங்கள் வெளிக் கொணரப்படாமலிருக்கலாம். அவ்வாறுயின் அவற்றைப் பற்றிய செய்திகளைக் கலையார்வம் மிக்கோர் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அடிக்குறிப்புக்கள்

1. தொல். புறத் சூத் 4.
2 திருமுருகு. 253.
3. கலித்தொகை. 89 : 8
4. சிலம்பு. 12 : 59 - 67
5. ஏ. ஏகாம்பரநாதன், "கொற்றவை வழிபாடு" அருளோசை. செப். 1975. பக். 88.
6, சிலம்பு. 12 : 68 - 69.
7. பெருங் கதை. 1 : 15 : 14 - 24
8. தேவாரம். 2215 : 5 - 6
9. புறப்பொருள் வெ. மாலை 20 : 1 - 2.
10. கம்பராமாயணம். 1 : 1 : 5 : 5 - 6
11 காஞ்சிபுரா : சிவபுண்ணியப்படலம். பா. 43.
12 Dr. R. Champakalakshmi and Mr. A. Swamy "Pallava antiquities in Periyavenmani" **Journal of the Madras University.** 1969. p 135.
13. இச்சிற்பத்தினைப் பற்றிய செய்தியினைத் தெரிவித்துள்ள பேராசிரியர் ஆர். சம்பகலக்குமி அவர்களுக்கு கட்டுரை ஆசிரியர் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளார்.
14 S. R. Balasubramaniam, Early Chola art Vol. 1, pt. 2., p. 394.
15. பி. எல் சாமி. தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு. பக். 70 - 74